வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.465/அ1/2018 நாள் 23.01.2018

---

பொருள் : பள்ளிக்கல்வி – கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை Educational Management Informaiton System (EMIS) வாயிலாக மாணவர்கள் விவரங்களை பதிவேற்றம் செய்தல் 29 ஜனவரி 2018க்குள் பணியினை நிறைவு செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் சார்பாக.

பார்வை : சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.2/எப்/2018 நாள் 22.01.2018

---

பார்வையில் காணும் இயக்குநரின் செயல்முறைகளில் கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை வாயிலாக மாணவர்களின் விவரங்களை பதிவு செய்தல் தொடர்பாக விரைந்து முடிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

1. கல்வியியல் மேலாண்மை மற்றும் தகவல் முகமை (EMIS) வாயிலாக அனைத்து வகைப் பள்ளிகளிலும் பயிலும் பெரும்பாலான மாணவர்களின் பெயர்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. எனினும் ஒரு சில மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளன.

2. அனைத்து வகை பள்ளிகளில் உள்ள 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் விடுபட்ட / வேறு பள்ளியிலிருந்து வந்து சேர்ந்த மாணவர்களின் விவரங்களை கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை (EMIS) வாயிலாக பதிவு செய்ய வேண்டும் என்று அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பள்ளி வருகைப் பதிவேட்டில் உள்ள மாணவர்களின் பெயர்களில் எவரேனும் விடுபட்டு இருந்தால் அந்தப் பெயர் மற்றும் விவரங்களைப் பதிவேற்றம் செய்தல் வேண்டும். பள்ளி வருகைப் பதிவேட்டில் இல்லாத மாணவர்களின் பெயர்களை பதிவு செய்தல் கூடாது. ஏதேனும் சந்தேகம் இருப்பின் மாநில கல்வித் தகவல் தொகுப்பு மேலாண்மையில் பணிபுரியும் பொறுப்பாளர் திரு.பழனியப்பன் என்பாரது கைபேசி எண்ணில் (9171190907) தொடர்பு கொண்டு தெளிவுபடுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மாணவர்கள் வருகைப் பதிவேட்டில் உள்ள அனைத்து மாணவர்களின் பெயரும் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுளளதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

5. ஏதேனும் மாணவர்கள் பள்ளியில் பயின்று மாற்றுச் சான்றிதழ் பெற்றுச் சென்றிருப்பின் அவர்களின் அவர்களின் பெயரினை உடனடியாக கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை (EMIS) தொகுப்பிலிருந்து நீக்குதல் வேண்டும்.

6. மேற்கண்ட கல்வியியல் மேலாண்மை தகவல் முகமை (EMIS) தொகுப்பிலிருந்து மாணவர்கள் பெயரை சேர்த்தல் மற்றும் நீக்கல் போன்ற பணிகள் தலைமை ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் நடைபெற வேண்டும். இப்பணியினை 29.01.2018க்குள் முடிக்க வேண்டும் என அனைத்து வகை தலைமை ஆசிரியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. விடுபட்ட மாணவர்களின் பெயரை பதிவேற்றம் செய்தல் மற்றும் வருகைப்பதிவேட்டில் இல்லாத மாணவர்களை பெயர்களை நீக்கம் செய்தல் போன்ற பணியில் குறைபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியரே பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதையே கடைசி நினைவூட்டாக கருதி மேற்படி பணியினை செம்மையாக முடித்திட மீளவும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

28-1-2018

பெறுநர்
அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
நகல் : மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர் / திருப்பத்தூர்.